1983 பிப்ரவரி 1]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹெண்டே: தலைவர் அவர்களே, நாங்கள் எவ்வளவோ பொறுமையோடு இங்கே கேள்விகளுக்கு பதில் அளிக்கிறோம். நல்வாழ்வுத் துறை அமைச்சர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை என்று சொல்கிறபோதும் பொறுமையின் உச்சக்கட்டத்தில் நின்று, நான் அதற்கு 'ரி-ஆக்ட்' செய்யாமல் பதில் சொல்கிறேன்; அதற்கு உடனடியாக பதில் ஏதாவது என்னாலும் சொல்லமுடியும். ஆனால் எனக்கு இருக்கும் வேதனையெல்லாம், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் அவர்கள் சற்று முன்பாக வந்து, ஒழுங்காக இந்த அறிக்கையைப் படித்து இருப்பார்களானால். இந்தக் கேள்விக்கு இடம் இருந்து இருக்காது.

'External cordiac massage was started and it was brought back to stimulation'

என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

மருத்துவ மனைகளில் cordiac deep fiburulator என்ற அந்தக் கருவி வாங்கிவைக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டி, காதில் அது கேட்கவில்லை என்று சொன்னார்கள். அந்த மெஷின் அங்கே இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், One of the best Thorasic surgeon Victor Solomon has done the external cordiac massage செய்திருக்கிறார்கள். ஆகவே, எல்லா வகையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், நான் உறுதியாகச் சொல்வேன். டாக்டர்கள் எதைச் சொல்கிறார்களோ அதை மட்டும் நான் அப்படியே ஏற்றுக்கொள்வது இல்லை, மீண்டும் மீண்டும் ஆயிரம் கேள்விகளைக் கேட்டு—மாண்புமிகு அமைச்சர் ராகவானந்தம் அவர்களுக்கு தெரியும்—நீங்கள் கேட்காத கேள்விகளையெல்லாம் கூட நான் கேட்டு அந்த டாக்டர்களிடமிருந்து நான் பதிலை வரவழைத்து இருக்கிறேன். சொன்னதை மட்டும் அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, cordiac deep fiburulator பயன்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு டாக்டர் சௌரிராஜன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அவர்பாணியில் பேச நான் தயாராக இல்லை.

(முற்பகல் 10–30)

5. அறிவிப்புகள்

(அ) கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1983 (ஆ இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.